[1974 மார்ச் 23

இராணிப்பேட்டை தொழிற்பேட்டை

* 578 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் தொழில்கள் தொடங்குவதற்கு இடம் கோரி எத்தனை மனுக்கள் இதுவரை வந்துள்ளன?

(இ) என்னென்ன தொழில்கள் தொடங்கப்படவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) நாற்பத்து நான்கு மனுக்கள்.

(இ) துப்புரவு செய்யும் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், இயந்திர கருவிகள், உருக்குக் குழாய்கள், அச்சு இயந்திரங்கள், அலுமினிய தகடுகள், பாத்திரங்கள், மருந்துப் பொருட்கள், மின்சாரக் கருவிகள், விவசாயக் கருவிகள், அட்டைகள் முதலியன உற்பத்தி செய்யும் தொழில்கள்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அதில் எத்தனைத் தொழில் கள் கூட்டுத் துறையில் தொடங்கியிருக்கிறார்கள்? வெளிநாட்டு உதவியுடன் கூட்டுத்துறையில் தொழில் தொடங்க மனு செய்திருக் கிறார்களா? இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் கூட்டுத் துறையில் அவர்கள் தொழில் தொடங்க அரசாங்கம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி யாரும் முன்வந்தால் உதவி செய்யப்படும்.

திரு. நா. வீராசாமி: அங்கே அமைச்சரவர்கள் விழா நடத்திய பின்னுல் ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தர்மபுரியில் ஒரு விழா நடத்தி, சிப்காட், சிட்கோ, டிட்கோ நிறுவனங்களைக் கொண்டுவந்து, டெக்னிக்கல் நோ ஹௌ கொடுத்து, பண உதவியை 24 மணி நேரத்திற்குள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ததால் தர்மபுரி மாவட்டத்தில் தொழில் பெருமளவில் பெருகி இருக்கிறது. அதே போன்று இராணிப்பேட்டையிலும் நம்முடைய அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த இரண்டில் இராணிப் பேட்டைக்கு முதலிடம்; தர்மபுரிக்கு இரண்டாவது இடம்தான்.

1974 மார்ச் 23]

திரு. எஸ். முருகையன் : வந்திருக்கக்கூடிய மனுக்களில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவை எத்தனை? தொழில் தொடங்க உரிமம் வழங்கும்போது, நம்முடைய மாநிலத்திலுள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிச்சயம் வழங்கப்படும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு வேறு பட்டிருந்தாலும் சுய நலத்தோடு ஒரு கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டுகிறேன். இந்தத் தொழில்களை எல்லாம் அரசாங்கமே ஆரம்பிக்க வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்பு ஒரு துணைக் கேள்வியில் கேட்டிருந்தேன். ஆனால் தனியார் முன்வர வேண்டு மென்று குறிப்பிட்டார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் என்ன காரணத்தாலோ முன்னால் இருந்த அரசும், நம்முடைய அரசும் மதுராந்தகம் வட்டத்தை புறக்கணித்து வருகின்றன. ஆகவே, அரசாங்கமே முன்வந்து, பொதுத்துறையில் தொழில்கள் நடத்த அனுதாபத்தோடு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எப்போதுமே கனம் அங்கத்தினர் மீது அனுதாபம் உண்டு. இந்த அமைச்சரவையில் உள்ள எல்லோருக்கும் அவர்கள்மீது அனுதாபம் உண்டு. தமிழ்நாட்டி லேயே செங்கற்பட்டு மாவட்டம் தான் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் இருக்கிறது. அதற்குக் காரணம் சென்னையைச் சுற்றி யுள்ள பகுதி எல்லாம் செங்கற்பட்டில்தான் இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் செங்கற்பட்டை சென்னையோடு சேர்த்துக்கொள்ள வேண்டும், அப்போதுதான் இன்னும் தொழில் வளர்ச்சியடையும் என்று சொல்கிறார்கள். இப்போதே தொழில் துறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. அப்படி முன்னேறி இருந்தாலும் அந்த மாவட்டத்தில் சில பகுதிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத் திலும் இப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளை எடுத்து முன்னேற்ற அனுமதி தரவேண்டுமென்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாகவே அதிகமான அளவுக்கு தொழில்கள் தொடங்க விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த விண்ணப்பங் களை "ப்ராசெஸ்" செய்வதில் கால தாமதம் ஏற்படுகிறது. இந்த சிக்கலைத் தவிர்க்க வேண்டுமென்றும், உடனடியாக "ப்ராசெஸ்"

செய்யும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும், அதற்கு மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து ஒரு "கம்பைன்ட் செக்ரெட்டேரியேட்டை" உருவாக்க வேண்டுமென்று ஒரு செய்தி 6 மாதங்களுக்கு முன்னால் மெயில் பத்திரிகையில் வந்திருக்கிறது. அதுகுறித்து மத்திய அரசு மாநில அரசுக்கு தகவல் கேட்டு ஏதாவது குறிப்பு அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆறு மாதம் அல்ல. சென்ற மாதம் தான் தொழில் துறை அமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய அரசின் சார்பில் இந்தக் கொள்கை வலியுறுத்தப்பட்டது. எல்லா அமைச்சர்களும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள். நாம் சொன்ன யோசனை, ஒவ்வொரு மாநிலத்திலும் தனியார் துறை, அரசுத் துறை, கூட்டுத் துறைகளிலிருந்து வரும் விண்ணப்பங்களை பரிசீலித்து உடனுக்குடன் பரிகாரம் கண்டு மத்திய அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்பது. மத்திய அரசு பல துறைகளிலிருந்தும் வருகின்ற மனுக்களை ஒன்றாகச் சேர்த்து பரிசீலனை செய்ய ஒரு "காமன் செக்ரெட்டேரியேட்" போடவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். தொழில் துறை அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த யோசனைக்கு மிகுந்த ஆர்வம் தருகின்ற அமைச்சராக பணியாற்றி வருகிறார்கள்.

Manufacture of milk food

* 579 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a baby food factory in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) குழந்தைகளுக்கான உணவு தயாரிக்க மத்திய அரசிடமிருந்து திருவாளர்கள் ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில், தென்னாற்காடு மாவட்டம் என்ற நிறுவனம் இசைவுக் கடிதமும், திருவாளர்கள் ஆல்விடோன் லாபரட்ரிஸ், சென்னை என்ற நிறுவனம் உரிமமும் பெற்றுள்ளன.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சபாநாயகர் அவர்களே, இந்த விண்ணப்பம் இல்லாவிட்டால், அரசாங்கமே இந்தத் துறையிலே முன்வந்து பேபி புட் பாக்டரி துவக்குவதற்கு உடனடியாக தீவிர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்களா?